அ.வ.எண்.90/2024 தேதி:07.08.2026

வா.சா.2 செந்தில்குமார் த/பெ.நடேசன்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு என்ன தொழில் என்றால் துண்டு(டவல்) வியாபாரம். இவ்வழக்கின் வாதி கிருஷ்ணகுமார் என் உறவினர் என்றால் இல்லை, என் நண்பர். இவ்வழக்கின் பிரதிவாதி செங்கோடனை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வாதி கிருஷ்ணகுமார் மூலமாகத்தான் தெரியும், தனிப்பட்ட முறையில் பழக்கம் இல்லை.

2) பிரதிவாதி செங்கோடன் தேங்காய் குத்தகை தொழில் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு இவ்வழக்கின் வாதி, பிரதிவாதி பற்றிய விவரங்கள் நன்கு தெரிந்தும், இவ்வழக்கிற்காக பிரதிவாதி பற்றி தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கிருஷ்ணகுமாருக்கு விவசாய நிலம், தென்னந்தோப்பு உள்ளது என்றால் உள்ளது.

3) வாதி கிருஷ்ணகுமாரின் தென்னந்தோப்பினை பிரதிவாதி செங்கோடன்தான் குத்தகைக்கு எடுத்து அறுவடை செய்து வருகிறார் என்றால் அவ்வாறு இருப்பதாக எனக்கு தெரியவில்லை.

4) பிரதிவாதி செங்கோடன் வாதி கிருஷ்ணகுமாரின் தென்னந்தோப்பினை குத்தகைக்கு எடுத்த வகையில் அறுவடை பணத்திற்கு ஆதரவாக அறுவடையின் போது பாதுகாப்பிற்காக பூர்த்தி செய்யப்படாமல் கையொப்பம் மட்டும் செய்து வாதி கிருஷ்ணகுமாரிடம் பிரதிவாதி செங்கோடன் கொடுத்திருந்த கடனுறுதி சீட்டினை நானும், வாதி கிருஷ்ணகுமாரும் தயார் செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

5) நான் சொல்வதுபோல் எந்த தேதியிலும் பிரதிவாதி செங்கோடன் வாதி கிருஷ்ணகுமாரிடம் கடன் கேட்கவில்லை, கடன் பெறவில்லை என்றால்

சரியல்ல. வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு கொடுத்த கடனுறுதி சீட்டினை நான்தான் எழுதி கொடுத்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) வழக்கு கடனுறுதி சீட்டு கடனுக்காக வழங்கப்பட்டதல்ல, பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட கடனுறுதி சீட்டு, வாதி கிருஷ்ணகுமார் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை**.